**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்**.94/2016

பெயர்-திரு. பொன்னுசாமி நாள்.14.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

இந்த வழக்கை நானும், நடராஜனும் சேர்ந்து தாக்கல் செய்தோம் என்றால் சரிதான், வழக்கு நிலுவையில் இருக்கும் போது இரண்டாம் வாதி நடராஜன் இறந்து விட்டார் என்றால் சரிதான். 2ம் வாதியின் வாரிசுகள் தான் 3 முதல் 5 வாதிகள் என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்யும் போது 1ம் பிரதிவாதி திம்மக்கால் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 7 பிரதிவாதிகள் திம்மக்காலுக்கும், சின்ன மாரநாயகருக்கும் பிறந்த மக்கள்என்றால் சரிதான். அவர்களுக்கு ராணி என்ற மகள் இருந்தார் என்றால் சரிதான். இராணி எப்போது இறந்தார் என எனக்கு தெரியாது. ராணியின் கணவர் ராமசாமி என்றால் சரிதான். ராணி, ராமசாமியின் மக்கள் தான் 8, 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது 3ம் பிரதிவாதி இறந்து விட்டர் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 10 முதல் 12 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி திம்மக்காள் தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி திம்மக்காளின் சார்பாக வழக்கறிஞர் என்னை கடந்த 10.08.2022ல் குறுக்கு விசாரணை செய்துள்ளார் என்றால் ஆமாம். அதற்கு பின்பு 1ம் பிரதிவாதி இறந்து விட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் இந்த வழக்கின் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்து புதுகலையனூர் கிராமம் பழைய க.ச.169, புதிய க.ச.118/2 என்றால் சரிதான். 27.08.1954ம் தேதியில் ஈரா மல்லநயக்கரின் மகன் சின்ன மாரநாயக்கர், சின்ன மாரநாயக்கர் மக்கள் பெரிய மாரநாயக்கர், சின்ன மாரநயக்கர், திம்மக்காள் ஆகியோர் சேர்ந்து பாகபிரிவினை ஆவணம் செய்து' கொண்டார்கள் என்றால் சரிதான். பெரிய மாரநாயக்கர் மகன் என் அப்பா என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சின்ன மாரநாயக்கர் என்றால் சரிதான். பாகபிரிவினை ஆவணத்தில் மற்றொரு சின்ன மாரநாயக்கர் எனது சித்தப்பா என்றால் சரிதான். திம்மக்காள் எனது பாட்டி என்றால் சரிதான். மேற்படி பாக பத்திர ஆவணத்தில் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சான்று நகலை தான் தாக்கல் செய்துள்ளேன். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும், வா.சா.ஆ.1ல் பொது சாராவில் இனாம் பூமிக்கு குயிட் ரெண்ட் பாத்தியம் சகிதம் என வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் அடுத்த பக்கத்தில் ABC

அட்டவணையில் கண்ட 169 நெம்பர் இனாம் காலை மேல்வாரத்திற்கும், குடிவாரத்திற்கும் சம்மந்தப்பட்டது என வாசகம் உள்ளது என்றால் சரிதான். இந்த பாகபிரிவினை பத்திரம் பழைய க.ச.169 க்கான சொத்துகள் இனாம் சொத்துக் என எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது தெரியாது. பழைய க.ச.169 கண்டுள்ள இனாம் சொத்துகளை யார் உழுது கொண்டிருக்கிறார்களோ அவர்களை தான் குடிவாரம் என்று சொல்கிறோம் என்றால் சரிதான். நான்தான் உழுது கொண்டிருக்கிறேன். 1954 ல் பாகபிரிவினை ஆவணத்தை ஏற்படுத்து போது நான் உழவில்லை என்றால் சரிதான். மேல்வாரம் என்பது சொத்தின் உரிமையாளரை குறிப்பிடும் என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.14 04:31:45 +0530

District Munsif